# இந்தியத் துணைத்தூதரகம்
## யாழ்ப்பாணம்
## <u>ஊடக அறிக்கை</u>

வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு என இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வேலைத்திட்டங்களின் ஓர் அங்கமாக இலங்கை ரூபா 250 மில்லியன் செலவில் 27 பாடசாலைகளைத் தெரிவுசெய்து மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடங்களை அமைப்பதற்க்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

2. இத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வட மாகாணத்தில் 10 பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டிடங்கள் மற்றும் விடுதிகள் அமைக்கப்பட்டு இந்திய துணைத் தூதுவராலும் வடமாகாண கல்வி அமைச்சராலும் இணைந்து திறந்து வைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

3. இதன் அடுத்த கட்டமாக இன்று (19 யூன் 2019) வவுனியாவில் தாலிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், செக்கடிப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், மூன்றுமுறிப்பு அரசினர் சிங்கள கலவன் பாடசாலையிலும், ஒலுமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்திலும் ஒவ்வொன்றும் முறையே 4.43 மில்லியன், 4.48 மில்லியன், 3.23 மில்லியன், 6.97 மில்லியன் மற்றும் 6.29 மில்லியன் இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட வகுப்பறை தொகுதிகள் மற்றும் ஆசிரியர் விடுதி யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு ச.பாலச்சந்திரன் அவர்களால் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

4. இது தொடர்பாக வவுனியா தாலிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் செக்கடிப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வகுப்பறைக் கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல்வெட்டுக்கள் யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு ச.பாலச்சந்திரன் மற்றும் வடமாகாண ஆளுனர் முனைவர் சுரேன் இராகவன் அவர்களால் இணைந்து திரைநீக்கம் செய்யப்பட்டதுடன் ஏனைய இரண்டு பாடசாலை வகுப்பறைத் தொகுதிகளிலும் / ஒரு பாடசாலையில் ஆசிரியர் விடுதியிலும் அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல்வெட்டுக்கள் யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு ச.பாலச்சந்திரன் மற்றும் வடமாகாண ஆளுனரின் பிரதிநிதியாக திரு சத்தியசீலன், செயலாளர், கல்வி அமைச்சு வடமாகாணம் அவர்களால் இணைந்து திரைநீக்கம் செய்யப்பட்டது.

5. விழாவில் உரையாற்றிய ஆளுனர் மற்றும் ஏனைய பேச்சாளர்கள் இந்திய அரசாங்கத்தினால் வடமகாண கல்வி அபிவிருத்திக்கு வழங்கப்படும் பல்வேறு உதவித்திட்டங்களுக்காக தமது நன்றிகளைத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய யாழ் இந்தியத் துணைத் தூதுவர் இந்திய அரசாங்கமானது வடமகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று குறிப்பிட்டார். கல்வித்துறை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் நிகழ்வில் சமூகமளித்திருந்தனர்.

***19 யூன், 2019***
***யாழ்ப்பாணம்***